ந.க. ஐ1/38070/2015

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தூத்துக்குடி.
நாள்: 17 .04.2017.

**தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களில் சேர்ந்துள்ள கழிவுத்தாள்களை அப்புறப்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிப்பு**

""""""""

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களில் சேர்ந்துள்ள கழிவுத்தாள்களை ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் அப்புறப்படுத்துவதற்கு 2017-2018 ஆம் ஆண்டிற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கப்பட்ட கழிவுத்தாள்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 12 .05.2017 அன்று பிற்பகல் 4.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளின் மேல் **கழிவுக் காகிதங்கள் அப்புறப்படுத்துவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்** என்ற தவறாமல் குறிப்பிட்டு

**மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது)**
**மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,**
**தூத்துக்குடி மாவட்டம்**
**சிவகாமி அம்மையார் பெருந்திட்ட வளாகம்,**
**கோரம்பள்ளம்**
**தூத்துக்குடி 628 101.**

என்ற முகவரியிட்டு நேரிலோ அல்லது தபாலிலோ மேற்குறிப்பட்ட தேதி நேரத்திற்குள் வந்து சேருமாறு அனுப்பப்பட்ட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை 12.05.2017 அன்று பிற்பகல் 04.00 மணிக்கு ஆஜராகியிருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் திறக்கப்படும்.

கழிவுக் காகிதங்கள் மெட்ரிக் அளவு முறையில், எடையின் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். மெட்ரிக் டன் ஒன்றுக்கு (1000 கிலோ) அதிக விலை கேட்கும் ஒப்பந்ததாரருக்கு, ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படும். அவரே ஒப்பந்தப்புள்ளிகள் உத்தரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு வரை உள்ள காலங்களுக்கு ஒப்பந்ததாரராக நியமிக்கப்படுவார்.

**ஏல நிபந்தனைகள்**

1. ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியுடனும் ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஒப்பந்தப்புள்ளி பிணை வைப்புத் தொகையாக மாவட்ட ஆட்சித்தலைவர்,

தூத்துக்குடி என்ற பெயரில் பாரத ஸ்டேட் வங்கியிலோ அல்லது ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலோ கேட்பு வரைவோலையாக **(Demand Draft)** பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளிகளுடன் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியரால் 1-4-2017 ற்கு பின் வழங்கப்பட்ட ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)-க்கும் குறையாத மதிப்பில் அசல் செல்வநிலைச் சான்று **(Solvency Certificate)** பெற்று இணைத்து அனுப்ப வேண்டும். செல்வநிலைச் சான்றின் நகலோ, புகைப்பட நகலோ பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. ஒப்பந்தாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகளை வாபஸ் பெற்றுக் கொண்டால் ஒப்பந்தப்புள்ளிக்காக பிணை வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
4. தேர்வு செய்யப்படாத ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான பிணை வைப்புத் தொகை வாபஸ் பெறாத ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியலிட்டு திரும்ப வழங்கப்படும்.
5. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏழு நாட்களுக்குள் ரூ.50000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)க்கான காப்புத் தொகையினை தூத்துக்குடி தலைமை அஞ்சல் அலுவலகத்தில் சேமிப்புக் கணக்கில் செலுத்தி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் மேற்படி காப்புத் தொகையை செலுத்தத் தவறினால் ஒப்பந்தப்புள்ளிகள் பறிமுதல் செய்யப்படும்.
6. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் அவருடைய சொந்தச் செலவில் ரூ.20/- (ரூபாய் இருபது மட்டும்) மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
7. கொள்முதல் செய்யப்படும் கழிவுக் காதிதங்களுக்கான கிரையத்தினை **0058 Stationery and Printing -200 other press receipts A.C, Sale proceeds of dead stock, waste paper and other articles, the cost of which was not met from office expenses (D.P.C.No./0058 00 200 A.C, 008)** என்ற அரசு கணக்கு தலைப்பிலும், விற்பனை வரியினையும் உடனடியாக செலுத்த வேண்டும்.

8. கழிவுத்தாள்கள் விற்பனை சம்பந்தமாக தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள ஆணைகளுக்கும் மற்றும் நிபந்தனைகளுக்கும் அவ்வப்போது அறிவிக்கும் ஆணைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஒப்பந்ததாரா் கட்டுப்பட்டவராவாா்.

9. ஒப்பந்ததாரர் அரசின் நிபந்தனைகளின்படி நடக்கத் தவறினால் உடனடியாக ஒப்பந்தம் முடிவு பெற்றதாகக் கருதப்பட்டு அவருக்கு நோட்டீஸ் கொடுக்கப்படும். கழிவுத்தாள்களை பகிரங்கமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ விற்பனை செய்யப்படும். அவ்விதம் விற்பனையில் கோரப்பட்ட தொகை ஒப்பந்ததாரரால் டெண்டர் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட தொகைக்குக் குறைவாக இருந்தால் அந்த வித்தியாசத் தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து தமிழ்நாடு வருவாய் வசூலிப்பு சட்டத்தின்படி வசூல் செய்யப்படும். அவரது பிணை வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

10. தேவையான வேறு தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவா் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நோ்முக உதவியாளா் (பொது) அவா்களிடம் நேரில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

11. கழிவுக்காகிதங்கள் என்பவை துண்டு பிரசுரங்கள், பழைய கிழிக்கப்பட்ட புத்தகங்கள், அலுவலகத்திற்கு தேவையற்ற பழுப்பு நிற அட்டை காகிதங்கள் உபயோகிக்கப்பட்ட ரோனியோ காகிதங்கள், கழிக்கப்பட்ட கார்பன் காகிதங்கள், கழிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்த கோப்புகள் ஆகியவையாகும். பழைய வாக்காளா் பட்டியல்கள், தோ்தல் சம்பந்தப்பட்ட காகிதங்கள், அரசிதழ் வெளியீடுகள் மற்றும் பருவ இதழ்கள் கழிவுக் காகிதங்கள் வரிசையில் சேராதவைகளாகும்.

12. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடும் விலை சந்தை நிலவரத்துக்கு ஒத்த அளவில் இருக்க வேண்டும். சந்தை நிலவரத்துக்கு சம்பந்தம் இல்லாத வகையில் மிகவும் அதிகமாக அல்லது மிகவும் குறைவாக விலைப்புள்ளிகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை நிராகரிக்க மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களுக்கு அதிகாரம் உண்டு.

13. ஒப்பத்தப்புள்ளிதாரா் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்களிலும் எந்தவித புகாா்களுக்கும் இடமின்றி கழித்தாட்களை விலைக்கு வாங்கி அப்புறப்படுத்தப்பட்ட விபரத்தினை எழுத்து மூலமாக அளித்த பின்னரே பிணை வைப்புத்தொகை தொகை திரும்ப வழங்கப்படும்.

14. எவ்வித முகாந்திரமும் இல்லாமல் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது தள்ளுபடி செய்யவோ மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களுக்கு அதிகாரம் உண்டு.

15. ஒப்பந்த புள்ளியில் இறுதி செய்யப்பட்ட ஒப்பந்தகாரா், இயக்குநா் எழுது பொருள் மற்றும் அச்சுத்துறையினரால் ,நடப்பில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கழிவுதாள் முகவா்களின் பட்டியல் காலாவதியாகும் தேதியிலிருந்து, ஒப்பந்த காலம் நிறைவு தேதி வரை மீண்டும் மறுநீட்டிப்பு செய்து நடப்பிலிருக்க வேண்டும். அப்படி பெற தவறும் பட்சத்தில் இவ்வொப்பந்தம் 16.9.2017 அன்று முடிக்கப்பட்டதாக கொள்ளப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான மற்றும் பிரிக்கப்படுவதற்கான நாள் மற்றும் நேரத்தினை வேறொரு நாள் மற்றும் வேறொரு நேரத்திற்கு மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களுக்கு உரிமையுண்டு.

ஓம்/-எம்.ரவி குமாா்

மாவட்ட ஆட்சித்தலைவா்,
தூத்துக்குடி.

/உ.ந.உ.படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
தூத்துக்குடி

பெறுநா்:

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கழிவுத்தாள் ஒப்பந்தக்காரா்கள்
(பட்டியல் பக்கம் 1 முதல் 6 வரை) (பதிவு தபால் ஒப்புதல் அஞ்சல் அட்டையுடன்)

நகல்:

1) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவா்கள்
(பட்டியலில் கண்டுள்ளப்படி)

| |
|---|
| அலுவலக விளம்பரப் பலகையில் விளம்பரம் செய்து விபரம் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது |

2)இயக்குனர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை,110 அண்ணாசாலை,சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பபடுகிறது.

3)அனைத்து மாவட்ட அலுவலர்கள்,தூத்துக்குடி மாவட்டம்

| |
|---|
| அலுவலக விளம்பரப் பலகையில் விளம்பரம் செய்யும் பொருட்டும், கழிவுத்தாட்களை விற்பனை செய்ய தயார் நிலையில் வைத்திருக்கும் பொருட்டும் அனுப்பபடுகிறது |

1) சார்ஆட்சியர்,தூத்துக்குடி

2) வருவாய் கோட்டாட்சித்தலைவர்கள், கோவில்பட்டி/திருச்செந்தூர்

6)மாவட்ட தகவல் அலுவலர்,தேசிய தகவல் மையம்,தூத்துக்குடி

(மாவட்ட இணைய தளத்தில் பிரசுரம் செய்யும் பொருட்டு)